
# புரியாது என்பதைப் புரியவைத்தவர்

‘‘எத்தனையோ தடவை கேட்டாச்சு, பெரியவா பதில் சொல்லல. இந்தத் தடவை பதில் கிடைக்கற வரைக்கும் இடத்தை விட்டு நகரக்கூடாது.’’

வைராக்கியத்துடன் காஞ்சி மடத்துக்குள் நுழைந்தார் அந்த மனிதர். வழக்கமான நமஸ்காரம், குசல விசாரிப்புகள் முடிந்தன. மனிதரின் மனமோ கேள்வியிலேயே லயித்திருந்தது. இருந்தாலும், எப்படி ஆரம்பிப்பது?

மெதுவான குரலில் ஒரு சித்தர் பாடலைப் பாடினார். ‘‘இறைவனை மட்டுமே சித்தத்தில் இறுத்தி ஏகாந்தமாய் இருக்கும் நாள் எந்நாளோ?’’ என்ற கருத்துத் தொனிக்கும் அந்தப் பாடலைப் பாடி முடித்த அந்த மனிதர் மீண்டும் ஒருமுறை பெரியவாளை நமஸ்கரித்தார். பெரியவாளின் முகத்தில் புன்னகை விரிந்தது. கண்களில் கேள்வி தொனித்தது.



‘‘எனக்கு எதுலயும் மனசு ஒட்டல. நல்ல விஷயத்தைத்தான் எழுதறோம்னாலும் எதுக்கு எழுதணும்னுதான் தோணறது. எதுவுமே வேண்டியிருக்கல. சன்னியாசம் வாங்கிண்டு போயிடணுன்னுதான் இருக்கு. நிறைய தடவை பெரியவாகிட்ட கேட்டாச்சு. இந்தத் தடவையாவது பெரியவா அதுக்கு அனுக்கிரகம் பண்ணணும்.’’

அப்பாடா, ஒருவழியாகச் சொல்லி முடித்து விட்டார், அந்த மனிதர்.

பெரியவா முகத்தில் தவழ்ந்த புன்னகை சிரிப்பாக மாறியது: ‘‘நான் இங்க உக்காந்துண்டு மடத்தை பரிபாலனம் பண்றேங்கற பேர்ல ஏதேதோ காலட்சேபம் பண்ணி, வயிறு வளர்த்துண்டு உருப்படாம இருப்பேனாம். ஆனா, நீ என்னடான்னா, என்னை விட்டுட்டு ஓடிப் போயி ஹிமாலயத்துல உக்காந்துண்டு தபஸ் பண்ணி மோட்சத்துக்கு போகணுமாம். தோ பாரு, நான் உருப்பட மாட்டேன், உன்னையும் உருப்பட விட மாட்டேன்,’’ நிதானமாக எழுந்த பெரியவா அந்த இடத்தை விட்டு அகன்றார்.

தீர்மானத்துடன் வந்த மனிதரின் மனதில் தாங்கமுடியாத ஏமாற்றம். ‘தைவம் மானுஷரூபேண (மனித உருவில் வந்த இறைவன்) ஆகிய பெரியவா, குடும்பச் சூழ்நிலை காரணமாக ஆங்கிலப் படிப்புப் படித்து வந்த என்னை ஆங்கில மோகத்தில் வீழ்ந்துவிடாமல் சரியான நேரத்தில் தடுத்து ஆட்கொண்ட குருநாதர், எனது ஒவ்வொரு சிறிய பெரிய விஷயத்திலும் என்னை வழிநடத்தி வருபவர், சன்னியாச விஷயத்தில் மட்டும் எனக்குப் பிடிகொடுக்காமலேயே பேசிவருகிறாரே!’ அவர் மனதில் தோன்றியது ஏமாற்றம் மட்டுமல்ல, கோபமும்தான், ‘எவ்வளவு சீரியசான விஷயம் பேசினாலும் இந்தக் கிழவருக்கு ஜோக்கடிக்கத்தான் தோன்றுமா?’

கொஞ்ச நேரம் கழிந்தது. மடத்தின் ஒரு மூலையில் தனிமையில் அமர்ந்திருந்தார் அவர். அப்போது அங்கு வந்தார் பெரியவா. கோபம் குறையாத அந்த மனிதர் மௌனமாக எழுந்து நின்றார்.

‘‘எம்மேல கோவமா?’’

‘ஆம்’ என்று எப்படிச் சொல்வது? எனவே மௌனம் தொடர்ந்தது.

‘‘எதையும் பத்தி யோசிச்சுக் குழப்பிக்காத. ஏன்னா உனக்கு ஒண்ணுமே புரியாது, புரிஞ்சுக்க முடியாது. உடம்பைப் பிழியறதுக்கு ஏதாவது கர்மா பண்ணணும். உனக்கு எழுத்துங்கற கர்மா அமைஞ்சிருக்கு. ‘தேமே’ன்னு அதைப் பண்ணிண்டு இரு. நல்ல விஷயம்தான்னாலும் எழுதறது பிடிக்கல, சரிதான். பிடிக்காட்டாப் பரவாயில்ல, எழுத முடியற வரைக்கும் எழுதிண்டு இரு. போதும்’’ கனிவுடன் தொடர்ந்தார் பெரியவா ‘‘ஒண்ணையும் போட்டு யோசிச்சுக் குழப்பிக்காத. ஒண்ணுமே புரியாது. புரிஞ்சுக்க முயற்சியும் பண்ணாத.’’

***

அந்த மனிதரின் பெயர் ரா. கணபதி. ‘அண்ணா’ என்று காஞ்சி மட வட்டாரத்தில் அறியப்படுபவர், கோடிக்கணக்கில் மந்திர ஜபம் செய்தவர். வாழ்நாளில் அவர் உணவருந்திய நாட்களைவிட உபவாசம் இருந்த நாட்கள்தான் அதிகம். ஏராளமான நாட்களை மௌனவிரதத்தில் கழித்தவர். எத்தனையோ மகான்களின் வாழ்க்கைச் சம்பவங்களையும் உபதேசங்களையும் கலை உணர்ச்சியோடு எழுத்தில் வடித்தவர் . . . . எல்லாவற்றுக்கும் மேலாக, நடமாடும் தெய்வம் என எல்லோராலும் போற்றப்பட்ட காஞ்சி

மகாபெரியவாளின் 'தெய்வத்தின் குரலை'த் தொகுத்தவர்.

அவரது ஆன்மிகத் தேடல் இந்தச் சம்பவத்துடன் முடிவடைந்தது.

'ஏதாவது கர்மா பண்ணணும்', 'ஒண்ணையும் போட்டு யோசிச்சுக் குழப்பிக்காத. ஒண்ணுமே புரியாது. புரிஞ்சுக்க முயற்சியும் பண்ணாத' அவரது வாழ்நாள் முழுவதும் அவருக்குள்ளே ஓடிய செய்தி இதுதான்.

ஆனால், அவரது வாழ்க்கையில் அவர் செய்தவை 'ஏதாவது கர்மா' மட்டும்தானா? அப்பப்பா, எத்தனை எத்தனை விஷயங்களைச் சேகரித்தார், அதற்கு எவ்வளவு படித்திருப்பார், எவ்வளவு தூரம் மெனக்கெட்டிருப்பார், எத்தனை ஆயிரக்கணக்கான பக்கங்களை எழுதிக்குவித்திருப்பார். அச்சில் வருமுன் அத்தனையையும் படித்துப் பிழைதிருத்தம் செய்ய யாரையும் அனுமதித்ததும் இல்லை. தனிமனிதனாகத்தான் அத்தனை வேலையையும் செய்துமுடித்தார். ஆனாலும் அவர் மனம் எதிலும் ஒட்டவே இல்லை. 'ஏதாவது கர்மா பண்ணணும், அவ்வளவுதான்' என்ற அளவில்தான் அவர் எழுத்துப் பணிகளில் ஈடுபட்டது. 'தாமரை இலைத் தண்ணீர் போல' என்று சொல்வார்களே, அப்படித்தான் அவர் வாழ்ந்து வந்தார்.



தர்ம சாஸ்திரங்களுக்கே அதாரிடியாக விளங்கும் 'தெய்வத்தின் குரலைத் தொகுத்தவர், எத்தனையோ புராணச் சம்பவங்களை தற்காலத் தமிழில் பதிவு செய்தவர், ராமகிருஷ்ணர், சாரதா தேவி, விவேகானந்தர், மகா பெரியவா, சாய்பாபா, ஸ்வயம்பிரகாசர், யோகி ராம்சுரத்குமார், மாதா அமிர்தானந்த மயி என ஏராளமான மகான்களின் வாழ்க்கைச் சம்பவங்களைப் பாமரனுக்கும் கொண்டு சென்றவர். நவராத்திரி நாயகி நூலில் அவர் எழுதிய 'முகவுரை என்கிற முக்கிய உரை', ஆன்மிகத் தேடலில் தவிக்கும் சாதகனுக்குச் சரியான வழிகாட்டி - இப்பேர்ப்பட்ட மனிதர், தனது பணிகளை ஒரு பொருட்டாகக் கருதியதே இல்லை. 'ஏதாவது கர்மா பண்ணணும்' என்ற அளவில் மட்டுமே அவர் இத்தனையையும் செய்துவந்தார்.

★★★

இத்தகைய மனிதருக்கு அருகிலேயே இருந்து பணிவிடை செய்யும் வாய்ப்பு அவ்வப்போது எனக்குக் கிடைத்தது. அந்த சந்தர்ப்பங்களில் அவரது இந்தத் தாமரை இலைத் தண்ணீர் வாழ்வைக் கண்கூடாகப் பார்த்து வியந்திருக்கிறேன்.

கர்மா, கர்ம பலன் ஆகியவை குறித்து ஒருமுறை அவரிடம் சந்தேகம் கேட்டேன். எனது கேள்வியை முடிக்கும் முன்பாகவே அவரிடம் இருந்து பதில் வந்தது: ''இதோபார், ஒரு பைத்தியம் தன்னைத் தானே சாட்டையால் அடித்துக் கொண்டு இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன என்று கேட்டால் என்ன பதில் சொல்வது? 'அது பைத்தியம், அப்படித்தான் இருக்கும்' என்றுதானே பதில்சொல்ல முடியும்! பைத்தியத்தின் செய்கைக்கு வேறு என்ன விளக்கம் கொடுப்பது? பராசக்தியும் அப்படித்தான். அவள் மகா மாயை, அவளது செயல்களுக்கு விளக்கம் சொல்ல முடியாது, அவளது படைப்பான இந்த ஸ்ருஷ்டி பற்றியும் எந்த விளக்கமும் சொல்ல முடியாது.''

வேறு ஒரு சந்தர்ப்பத்தில் அவரிடம் எனது வியாபாரத்தில் ஏற்பட்ட ஒரு சிக்கலான பிரச்சினையைப் பற்றிக் கூறி அவரது வழிகாட்டுதலை நாடினேன். நான் என்ன செய்ய வேண்டும் என்பதை விளக்கியபின்னர் அவர் கூறியது: ''எல்லாத்தையும் பண்றது அவதான் (அம்பாள்). உன் கம்பெனியை நடத்தறதும் அவதான். அதெப்படி, 'அம்பாளே நடத்தற கம்பெனியில இவ்வளவு ஏற்ற இறக்கங்கள்?' அப்படீன்னுல்லாம் யோசிக்காதே. உனக்கு ஒண்ணும் புரியாது. உன்னால புரிஞ்சுக்கவும் முடியாது. அதனால, எதையும் போட்டுக் குழப்பிக்காதே.''

அண்ணா சொன்ன இந்த வார்த்தைகள் என் மனதில் ஆழமாகப் பதிந்தன. எனது செயல்களை எல்லாம் செய்வது எவளோ ஒருத்திதான், நிச்சயமாக நான் இல்லை எனும்போது எனக்கு எந்தவித முக்கியத்துவமும் இல்லை. I am nobody என்பது புரிகிறது.

எனது கேள்விகளுக்கு விடை கிடைக்கப்போவது இல்லை, வெறும் தேடல் குழப்பம்தான் மிஞ்சும் என்ற அவரது வார்த்தைகளும் அப்படியே. ஏனெனில் இதுவரை, ஒரு கேள்விக்குக் கிடைத்த விடை அடுத்த கேள்விக்கு இட்டுச் செல்வது என்ற ரீதியில்தான் எனது ஆன்மிகப் பயணம் இருந்தது. கேள்விகளுக்கு விடையே கிடைக்காது என்பது இப்போது புரிகிறது. மனதில் இன்னும் கேள்விகள் தொடரத்தான் செய்கின்றன. ஆனால் கூடவே, 'பதில் கிடைக்காது' என்ற புரிதலும் இருக்கிறது. அதுபோதும்.

**சுபர்ண**